# புதுச்சேரிஆதிதிராவிடர் மேம்பாட்டுக்கழகம்
(புதுச்சேரிஅரசின் ஓர் ஏற்பு நிறுவனம்)

+++

எண்.2027/புஆமேக/ஆஷா/2021-22 தேதி: 22.06.2021

## அறிவிப்பு

புதுடில்லியிலுள்ள தேசிய அட்டவணை இனத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழககத்தின் (NSFDC) மூலம் கோவிட்–19 பெருந்தொற்று நோயினால் இறந்தவரின் உறவினரிடமிருந்து வருமானம் ஈட்ட ஏதுவான சுய தொழில் தொடங்க கடன் பெற ஆஷா (ASHA) என்ற ஓர் புதிய கடன் திட்டத்தின் வழியாக புதுச்சேரி ஆட்சிப்பரப்பைச் சார்ந்த இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்துகடன் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கத் தேவையானதகுதிகள்:

(அ) இந்துஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும்.

(ஆ) குடும்பஆண்டுவருமானம் ரூ.3,00,000/-(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்கவேண்டும்.

(இ) கோவிட்–19 பெருந்தொற்றால் இறந்தவரின் வயதுவரம்பு 18 முதல் 60 வரை இருத்தல் வேண்டும்.

(ஈ) கோவிட்–19 அல்லது கொரோனா பெருந்தொற்றால் இறந்தார் என்பதற்கு சான்றாக கீழ்கண்ட ஏதேனும் ஓர் ஆவணத்தை சமர்பிக்கவேண்டும்:

(i) பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் அல்லது உள்ளாட்சி அமைப்பால் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ்.

(ii) உள்ளாட்சிஅமைப்பால் வழங்கப்பட்ட இறப்பு /அடக்கச் சான்றிதழ்.

(iii) மருத்துவமனையால் இறந்துவிட்டார் என்று வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ்.

(iv) இறப்பானது கிராம மட்டத்தில் நிகழ்ந்திருந்து இறப்பு அடக்கச் சான்றிதழ் இல்லாதபட்சத்தில், அந்தகிராம வட்டாரவளர்ச்சி அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழை அளிக்கலாம்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப்படிவங்களை புதுச்சேரியில் உள்ள இக்கழக அலுவலகத்திலோ அல்லது காரைக்காலில் உள்ள கிளைஅலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றிதழ்களுடன் 30.06.2021–க்குள் புதுவையில் வசிப்பவர்கள் இவ்வலுவலகத்திலும், காரைக்காலில் வசிப்பவர்கள், பெருந்தலைவர் காமராசர் வளாகம், மதகடியில் அமைந்துள்ள இக்கழக கிளை அலுவலகதிலும் சமர்ப்பிக்கவேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ச.யஷ்வந்தய்யா)
மேலாண் இயக்குநர்